# உள்ளாட்சித் தேர்தல்கள் பற்றிய சிறப்பம்சங்கள்

1. **நகராட்சி தேர்தல்கள்:-**

நகரசபை தலைவர் மற்றும் நகரசபை கவுன்சில் உறுப்பினர்கள் ஆகியவர்கள் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். நகரசபை துணைத்தலைவராக, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரசபை கவுன்சில் உறுப்பினர்களுள் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். நகரசபை தலைவர் மற்றும் நகரசபை கவுன்சிலர் தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடைபெறும். அதற்காக மாநில தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகளின் பட்டியலை முடிவு செய்து வெளியிட்டுள்ளது.

2. **நகரமன்ற தலைவர் / உறுப்பினர் தகுதிகள்:-**

(அ) நகரசபை தலைவர் / உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடும் ஒருவர், அந்த நகராட்சியை சேர்ந்த வாக்காளராக இருத்தல் வேண்டும்

(ஆ) நகரசபை தலைவராக (Chairman) போட்டியிடுபவர் 25 வயதும், கவுன்சில் உறுப்பினராகப் போட்டியிடுபவர் 21 வயதும், பூர்த்தி அடைந்திருப்பவராக இருத்தல் வேண்டும்

(இ) நகரசபை தலைவராக போட்டியிடும் ஒருவர், நகரசபை உறுப்பினராகப் போட்டியிட முடியாது.

(ஈ) நகரசபை உறுப்பினராகப் போட்டியிடும் ஒருவர், நகரசபை தலைவராகப் போட்டியிட முடியாது.

(உ) நகராட்சியின் ஒரு வார்டை சேர்ந்த ஒருவர் மற்றொரு வார்டில் கவுன்சிலராக தேர்தலில் நிற்க, அவரின் பெயர் எந்த வார்டின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளதோ அதன் நகலையோ அல்லது அதன் விவரம் அடங்கிய உரிய சான்றளிக்கப்பட்ட நகலையோ வேட்பு மனுவுடன் இணைக்கவேண்டும்.

(ஊ) ஒருவர் ஒரு தேர்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பு மனுவை தாக்கல் செய்யலாம். ஆனால் நான்கு வேட்பு மனுவுக்கு மேல் தாக்கல் செய்யக்கூடாது.

(எ) ஒரு வாக்காளர், ஒரு வேட்பு மனுவில் மட்டுமே முன்மொழிபவராக கையெழுத்து இடலாம்.

(ஏ) ஒரு வாக்காளர், ஒரு தேர்தலில் நிற்க விரும்பினால், அவர் வேறு எந்த வேட்பாளரின் வேட்பு மனுவில், முன்மொழிபவராக கையெழுத்து இடமுடியாது.

3. **சின்னங்கள் ஒதுக்கீடு:-**

(அ) நகரசபை தலைவர் மற்றும் நகரசபை உறுப்பினர் (கவுன்சிலர்) ஆகிய தேர்தல்கள், கட்சிசார்புள்ள தேர்தல்களாகும். நகரசபை தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள், பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளால் தேர்தலில் நிறுத்தப்பட்டால் அவ்வாறு நிறுத்தப்பட்ட வேட்பாளர்களுக்கு அந்தக் கட்சியின் சின்னம் தேர்தல் சின்னமாக அளிக்கப்படும். இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் புதுவை மாநில தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாக கருதப்படும்.

(ஆ) நகராட்சி வாக்காளர்கள், இரண்டு வாக்குகள் அளிக்க வேண்டும். அந்த இரண்டு வாக்குச்சீட்டுகளும், இரண்டு வெவ்வேறு நிறங்களில் இருக்கும். நகரசபை தலைவர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு, இளச்சிவப்பு (pink) நிறத்திலும், உறுப்பினர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு, வெள்ளை நிறத்திலும் இருக்கும்.

4. **வைப்புத்தொகை:-**

வேட்பாளர்கள் வேட்புமனு சமர்பிக்கும்போது செலுத்தவேண்டிய வைப்புத்தொகை பற்றிய விபரங்கள்:-

| வைப்புத்தொகை | பொது | அட்டவணை இனத்தவர் |
|---|---|---|
| அ. நகரசபை அவைத்தலைவர் | ரூ. 3000 | ரூ. 1500 |
| ஆ. நகரசபை உறுப்பினர் | ரூ. 1000 | ரூ. 500 |

5. **தேர்தல் செலவு:-**

(அ) நகரசபை தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மேலாக தேர்தல் செலவு செய்யக்கூடாது.

1) **நகரமன்ற தலைவர் தேர்தல்:-**

| | | |
|---|---|---|
| I | புதுச்சேரி நகராட்சி | 20,00,000 |
| Ii | ஊழவர்கரை நகராட்சி | 20,00,000 |
| Iii | காரைக்கால் நகராட்சி | 8,50,000 |
| Iv | மாகி நகராட்சி | 6,50,000 |
| V | ஏனாம் நகராட்சி | 6,50,000 |

## 2) நகரமன்ற உறுப்பினர் தேர்தல் ரூ 2,00,000

**II பஞ்சாயத்து தேர்தல்:-**

1. கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர்/கிராமப் பஞ்சாயத்து தலைவர் மற்றும் கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர் ஆகிய தேர்தல்கள், நேரடி தேர்தல்கள் ஆகும். கொம்யூன் பஞ்சாயத்து தலைவர், துணை தலைவர் தேர்தல் மற்றும் கிராம பஞ்சாயத்து துணை தலைவர் ஆகிய தேர்தல்கள் மறைமுக தேர்தல்கள் ஆகும். கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் தலைவர் கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் வார்டுகளிலிருந்து நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரை கொம்யூன் பஞ்சாயத்து தலைவராக தேர்ந்தெடுப்பர். கொம்யூன் பஞ்சாயத்து துணைதலைவர்:- கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர்களும், அந்த கொம்யூன் பஞ்சாயத்துக்குள் அடங்கிய கிராமப் பஞ்சாயத்துகளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்து தலைவர்களும் சேர்ந்து, கொம்யூன் பஞ்சாயத்து துணைதலைவரை தேர்ந்தேடுப்பர்.

கிராமப்பஞ்சாயத்து துணைதலைவர்:- கிராமப் பஞ்சாயத்து வார்டுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரை, கிராமப்பஞ்சாயத்து துணைதலைவராக தேர்ந்தெடுப்பர். கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர் தேர்தல் கட்சி அடிப்படையில் நடத்தப்படும்.

**2. வேட்பாளரின் தகுதிகள்:-**

(அ) பஞ்சாயத்து தேர்தல்களில் போட்டியிடும் ஒருவர், அந்தந்த கொம்யூன் பஞ்சாயத்து / கிராமப் பஞ்சாயத்து வாக்காளராக இருத்தல் வேண்டும்.

(ஆ) பஞ்சாயத்து தேர்தல்களில் போட்டியிடுபவர், 21 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(இ) கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினராக போட்டியிடுபவர், கிராமப் பஞ்சாயத்து தலைவராக அல்லது உறுப்பினராக போட்டியிட முடியாது.

(ஈ) கிராமப் பஞ்சாயத்து தலைவராக போட்டியிடுபவர் கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினராகவோ கிராமப் பஞ்சாயத்து உறுப்பினராகவோ போட்டியிட முடியாது.

(உ) கிராம பஞ்சாயத்து உறுப்பினராக போட்டியிடுபவர், கிராமப்பஞ்சாயத்து தலைவராகவோ, கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினராகவோ போட்டியிடமுடியாது.

3. **சின்னங்கள் ஒதுக்கீடு**

கிராமப் பஞ்சாயத்து தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் தேர்தல்கள் கட்சி சார்பற்ற தேர்தல்கள் ஆகையால் கட்சி சார்பற்ற சின்னங்கள்(free symbols) வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படும். கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர் தேர்தல், கட்சி அடிப்படையில் நடத்தப்படுவதால் இத்தேர்தலுக்கு அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்களுக்கு, அக்கட்சியின் சின்னம் ஒதுக்கப்படும்.

ஒரு வாக்காளர், பஞ்சாயத்துத் தேர்தலுக்கு மூன்று வாக்குகள் அளிக்கவேண்டும். இந்த வாக்குச்சீட்டுக்கள் மூன்றுவித வெவ்வேறு நிறங்களில் இருக்கும். கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு பச்சை நிறத்திலும் கிராமப்பஞ்சாயத்து தலைவர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு இளஞ்சிவப்பு(pink) நிறத்திலும், கிராமப்பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு வெள்ளை நிறத்திலும் இருக்கும். கிராமப்பஞ்சாயத்து தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் தேர்தல்கள் கட்சி சார்பற்ற தேர்தல்களாக இருப்பதால், இத்தேர்தல்களில் பயன்படுத்தப்படும் வாக்குச்சீட்டில் சின்னங்கள் மட்டும் அச்சடிக்கப்பட்டிருக்கும். மேலும் கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர் தேர்தல் கட்சி சார்புடைய தேர்தலாகையால் இந்த தேர்தலின் வாக்குச்சீட்டில், வேட்பாளரின் பெயருடன் அவருக்கு ஒதுக்கப்பட்ட கட்சி சின்னமும் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

4. **<u>வைப்புத்தொகை:-</u>**

| வரிசை எண் | வைப்புத் தொகை | பொது | அட்டவனை இனத்தவர் |
|---|---|---|---|
| அ | கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர் | ரூ.500 | ரூ.250 |
| ஆ | கிராமப் பஞ்சாயத்து தலைவர் | ரூ.500 | ரூ.250 |
| இ | கிராமப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் | ரூ.250 | ரூ.125 |

5. **<u>தேர்தல் செலவு:-</u>**

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் கீழே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேல் தேர்தல் செலவு செய்யக்கூடாது.

| | | |
|---|---|---|
| அ | கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினருக்கான தேர்தல் | ரூ.2,00,000 |
| ஆ | கிராமப்பஞ்சாயத்து தலைவருக்கான தேர்தல் | ரூ.1,50,000 |
| இ | கிராமப்பஞ்சாயத்து உறுப்பினருக்கான தேர்தல் | ரூ.15,000 |

## <u>III. இட ஒதுக்கீடு</u>

**<u>அட்டவணை இனத்தவருக்கு:-</u>**

2001 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அரசு வார்டு வாரியான அட்டவணை இனத்தவரின் மக்கள் தொகையை வெளியிட்டுள்ளது. அதனை அடிப்படையாகக்கொண்டு மாநில தேர்தல் ஆணையம் எந்தெந்த வார்டுகள் அட்டவணை இனத்தவருக்கானது என்று கண்டறிந்து அதனை வெளியிட்டுள்ளது. மேலும் பெண்களுக்கான வார்டுகளும் கண்டறியப்பட்டு வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:-

இந்த இட ஒதுக்கீடு சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இந்த சுழற்சி முறை இட ஒதுக்கீடு ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை செய்யப்படும்.

**நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து தேர்தல்களுக்கான இட ஒதுக்கீடு விபரம்:-**

| தேர்தல் விபரம் | மொத்த எண்ணிக்கை | அட்டவணை இனத்தவர் | அட்டவணை இனத்தவர் (பெண்கள்) | பொது பெண்கள் | பொது |
|---|---|---|---|---|---|
| நகர சபைத் தலைவர் | 5 | 1 | - | 2 | 2 |
| நகர சபை கவுன்சிலர் | 122 | 12 | (6) | 36 | 74 |
| கொம்யூன் பஞ்சாயத்து மன்ற தலைவர் | 10 | 2 | (1) | 3 | 5 |
| கொம்யூன் பஞ்சாயத்து மன்ற உறுப்பினர் | 98 | 24 | (9) | 28 | 46 |
| கிராமப் பஞ்சாயத்து தலைவர் | 98 | 17 | (5) | 31 | 50 |
| கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர் | 815 | 201 | (77) | 227 | 387 |

2. **வாக்களிக்கும் நேரம்:-**

நகரசபை மற்றும் பஞ்சாயத்து தேர்தல்களுக்கான வாக்களிக்கும் நேரம் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

3. **வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்:-**

மாநில தேர்தல் ஆணையத்தால் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள “வேட்பாளர் பின்பற்றவேண்டிய நெறிமுறைகள்” (Code of Conduct) பின்பற்றியும், வரையறுக்கப்பட்ட தொகைக்கு மிகாமலும் தேர்தல் செலவுகள் செய்யுமாறும் வேட்பாளர் அறிவுறுத்தப்படுகிறார். தேர்தல் செலவுகளை துல்லியமாக கணக்கிடவும் தேர்தல் விதிமுறைகளை மீறிய எந்த செயல்களிலும் ஈடுபடுகின்றார்களா என்பதை கண்காணிக்கவும் பார்வையாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு அந்தந்த பகுதியின் நகரசபை/கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, வேட்பாளர்களும், வாக்காளர்களும் மற்றும் அரசியல் கட்சிகளும் அந்தந்தப் பகுதியைச்சார்ந்த நகரசபை/கொம்யூன் பஞ்சாயத்து தேர்தல் நடத்தும் அதிகாரிகளை அறிந்து வைத்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் பெயர்கள் மாநில அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் தகவலுக்காக தேர்தல் அதிகாரிகளின் பெயர்களும் தொலைபேசி எண்களும் கீழே தரப்பட்டுள்ளன:-

## செயலர் / மாவட்ட தேர்தல் அதிகாரி நகராட்சிகள் / கொம்யூன் பஞ்சாயத்துக்கள் உள்ளாட்சி தேர்தல் - 2012

| வரிசை எண் | தேர்தல் அதிகாரிகளின் பெயர் மற்றும் பதவி | அதிகாரியின் பதவி | நகராட்சிகள் கொம்யூன் பஞ்சாயத்துக்கள் | தொலைப்பேசி எண் | அலுவலுக டெலிபோன் எண். |
|---|---|---|---|---|---|
| 1 | Dr. S.B. தீபக் குமார், I.A.S., செயலர் (வருவாய்)-மற்றும்- ஆட்சியர், புதுச்சேரி | மாவட்ட தேர்தல் அதிகாரி | புதுச்சேரி | 9442249884 | 2231200<br>2248691 |
| 2 | J. அசோக் குமார் I.A.S, மாவட்ட ஆட்சியார், காரைக்கால் | மாவட்ட தேர்தல் அதிகாரி | காரைக்கால் | 9443124852 | 04368-222025<br>222444 |
| 3 | R. அருணாசலம் மண்டல தேர்தல் அதிகாரி, மாஹி | மண்டல தேர்தல் அதிகாரி | மாஹி | 9447732720 | 0490-2332233 |
| 4 | S. கணேசன், மண்டல தேர்தல் அதிகாரி, ஏனாம் | மண்டல தேர்தல் அதிகாரி | ஏனாம் | 09440204797 | 0884-2321268 |

| | | | | |
|---|---|---|---|---|
| வரிசை எண் | தேர்தல் அதிகாரிகளின் பெயர் மற்றும் பதவி | பதவி | நகராட்சிகள் கொம்யூன் பஞ்சாயத்துக்கள் | தொலைப்பேசி எண் |
| 1 | G. பன்னீர் செல்வம், தொழில் மற்றும் உயர்கல்வி இயக்குனர், புதுச்சேரி | செயலர் மாநில தேர்தல் ஆணையம் | நகராட்சி தேர்தல் 4 மண்டலம், புதுச்சேரி | 9443225354 |
| 2 | S.D. சுந்தரேசன் போக்குவரத்து ஆணையர், புதுச்சேரி | செயலர் மாநில தேர்தல் ஆணையம் | கொம்யூன் பஞ்சாயத்து தேர்தல் புதுச்சேரி | 9443633122 |
| 3 | E. வல்லவன், இயக்குனர், பள்ளி கல்வி துறை, புதுச்சேரி | செயலர் மாநில தேர்தல் ஆணையம் | கொம்யூன் பஞ்சாயத்துக்கள் தேர்தல் காரைக்கால் | 9442244179 |
| 4 | G. ஸ்ரீனிவாஸ் ஆணையர், தொழிலாளர் துறை, புதுச்சேரி | இணை செயலர் மாநில தேர்தல் ஆணையம் | தலைமையகம் | 9894067834 |

<u>தேர்தல் நடத்தும் அதிகாரி நகராட்சிகள் / கொம்யூன் பஞ்சாயத்துக்கள்</u>
<u>உள்ளாட்சி தேர்தல் - 2012</u>

| வரிசை எண் | நகராட்சிகள் / கொம்யூன் பஞ்சாயத்துக்கள் | தேர்தல் அதிகாரிகளின் பெயர் | அலுவலுக டெலிபோன் எண் | தொலைப் பேசி எண் |
|---|---|---|---|---|
| 1 | புதுச்சேரி | L. குமார், துணை ஆணையர், விற்பணை வரி துறை, புதுச்சேரி | | 9486267824 |
| 2 | உழவர்கரை | கிருஷ்ணகுமார், இயக்குனர், தொழில்துறை, புதுச்சேரி | | 9443221214 |
| 3 | காரைக்கால் | Dr. முத்தம்மா I.A.S. துணை ஆட்சியார், (வருவாய்),காரைக்கால் | | 9443124851 |
| 4 | முாஹே | R. அருணாசலம், மண்டல தேர்தல் அதிகாரி, மாஹி | | 9447732720 |
| 5 | ஏனாம் | S. கணேசன், மண்டல தேர்தல் அதிகாரி, ஏனாம் | | 09440204797 |
| 6 | அரியாங்குப்பம் | Dr. A.S. சிவகுமார், இயக்குனர், சுற்றலா துறை, புதுச்சேரி | 2358573 | 9442277683 |
| 7 | பாகூர் | M. தினேஷ், இயக்குனர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, புதுச்சேரி | 2231220 | 9443289490 |
| 8 | மண்ணாடிப்பட்டு | R. சந்திரசேகரன், துணை ஆணையர், போக்குவரத்து துறை, புதுச்சேரி. | 2280170 | 9442108400 |
| 9 | நெட்டப்பாக்கம் | S. தம்மு கணபதி, துணை தொழிலாளர் ஆணையர், புதுச்சேரி. | 2279278 | 9487636115 |
| 10 | வில்லியனூர் | A. வின்செண்ட் ராயர், துணை ஆட்சியர் வருவாய் (வடக்கு), புதுச்சேரி. | 2231250 | 9443383418 |
| 11 | கோட்டுச்சேரி | R. துரைராஜன், உயர்நிலை கணக்கு அதிகாரி, பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரி, காரைக்கால் | 231390 | 9942997996 |
| 12 | நெடுங்காடு | D. சந்தானசாமி, முதல்வர், காரைக்கால் தொழிற்கல்வி கல்லூரி, காரைக்கால் | 04368-265795 | 9443609028 |
| 13 | நிரவி | N. காந்திராஜன், துணை இயக்குனர் உள்ளாட்சி துறை, காரைக்கால். | 223842 | 9865694778 |
| 14 | திருமலைராயன் பட்டிணம் | S. நாகராஜன், துணை இயக்குனர் குடிமை பொருள் மற்றும் வழங்கள் துறை, காரைக்கால் | 222718 | 9442636056 |
| 15 | திருநள்ளார் | A. ராஜராஜன் வீராசாமி, செயலாக்க அதிகாரி (கோயில்கள்), காரைக்கால் | 236503 | 9994336733 |

**<u>நகராட்சித் தேர்தல்கள்</u>:-**

5 நகராட்சிகள் 5 நகரசபை தலைவர் 5 நகரசபை துணைத்தலைவர் மற்றும் 122 கவுன்சிலர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர்

நகரசபை தலைவர் (Municipal Chairman):- கட்சி அடிப்படையில் வாக்காளர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுவர் - வயது 25

நகரசபை உறுப்பினர் (Municipal Councilor) :- கட்சி அடிப்படையில் வாக்காளர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர் - வயது 21

நகரசபை துணைத்தலைவர் (Municipal Vice-Chairman) :- நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களால் (கவுன்சிலர்) அவர்களுக்குள் ஒருவரை நகரமன்ற துணைத்தலைவராக தேர்ந்தெடுப்பர்.

**<u>பஞ்சாயத்து தேர்தல்கள்:-</u>**

10 கொம்யூன் பஞ்சாயத்துக்கும் 10 கொம்யூன் பஞ்சாயத்து மன்றத் தலைவர் பதவிகளும் 10 கொம்யூன் பஞ்சாயத்து மன்றதுணைத் தலைவர் பதவிகளும் 98 கிராமப்பஞ்சாயத்துக்கு 98 தலைவர் பதவிகளும் 98 கிராமப்பஞ்சாயத்து துணைத்தலைவர் பதவிகளும் 815 வார்டு உறுப்பினர் பதவிகளும் தேர்தல் மூலம் நிரப்பப்படும்.

கிராமப் பஞ்சாயத்து தலைவர்:- வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். கட்சி சார்பற்ற தேர்தல் ஆகும். வயது 21.

கிராமப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்:- கிராமப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் அந்தந்த வார்டு வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இது கட்சி சார்பற்ற தேர்தல் ஆகும். வயது 21.

கிராமப் பஞ்சாயத்து துணைத் தலைவர்:- ஒரு கிராமத்தில் உள்ள வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களால் அவர்களுக்குள் கிராமப்பஞ்சாயத்து துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவர்.

கொம்யூன் பஞ்சாயத்து மன்றத்தலைவர் (Chairman):- வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கொம்யூன் பஞ்சாயத்து மன்ற உறுப்பினர்கள் அந்தந்த கொம்யூன் பஞ்சாயத்து மன்றத் தலைவர் பதவிக்கு அவர்களுக்குள் ஒருவரை தலைவராக தேர்ந்தெடுப்பர்.

கொம்யூன் பஞ்சாயத்து மன்றத் துணைதலைவர் (Vice-Chairman):- வாக்காளர்களால் நேரடியாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட கொம்யூன் பஞ்சாயத்து மன்ற உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒருவரை அந்த கொம்யூன் பஞ்சாயத்துக்குள் அடங்கிய கிராமப் பஞ்சாயத்துகளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்து தலைவர்களும் சேர்ந்து, கொம்யூன் பஞ்சாயத்து துணைதலைவரை தேர்ந்தெடுப்பர்.

(உதீப்த ரே)
**மாநிலத் தேர்தல் ஆணையர்**